# அலகு – 5

## TT0305 உலகளாவிய படைப்புகள்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

உலகளவில் காணப்படும் குழந்தை இலக்கியங்களைப் பற்றியும், புதுக்கவிதை உலகளவில் தோன்றிய வரலாற்றினைப் பற்றியும், உலகளாவிய சிறுகதைகளின் தோற்றம் பற்றியும் மற்றும் உலக நாடுகளின் மரபிலக்கியங்களைப் பற்றியும், இந்தியாவில் வழங்கப்படும் விருதுகள் பற்றியும் இவ்வலகில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- உலக அளவில் உள்ள படைப்பாற்றலை அறிதல்.
- உலக நாடுகள் பலவற்றின் குழந்தை இலக்கியங்களை அறிதல்.
- புதுக்கவிதைகள் உலக அளவில் உள்ளதைத் தெரிந்து கொள்ளல்.
- பல நாடுகளில் உள்ள சிறுகதைகளை அறிதல்.
- பிறநாட்டு மரப்பிலக்கியங்களைத் தெரிந்து கொள்ளல்.
- மிகச் சிறந்த இலக்கிய விருதுகளைப் பற்றி அறிதல்.

## பாட அமைப்பு


| | |
|---|---|
| **5.0** | **பாட முன்னுரை** |
| **5.1** | **குழந்தை இலக்கியங்கள்** |
| 5.1.1 | தமிழில் குழந்தை இலக்கியங்கள் |
| 5.1.2 | அயலகக் குழந்தை இலக்கியங்கள் |
| 5.1.3 | இலங்கையில் குழந்தை இலக்கியம் |
| 5.1.4 | சிங்கப்பூரில் குழந்தை இலக்கியம் |
| 5.1.5 | மலேசியாவில் குழந்தை இலக்கியங்கள் |
| **5.2** | **சிறந்த புதுக்கவிதைகள்** |
| 5.2.1 | தமிழில் புதுக்கவிதைகள் |
| 5.2.2 | இலங்கையில் புதுக்கவிதை |
| 5.2.3 | சிங்கப்பூர் புதுக்கவிதைகள் |
| 5.2.4 | மலேசியப் புதுக்கவிதைகள் |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **5.3** | **மரபிலக்கியப் படைப்புகள்** |
| 5.3.1 | இலங்கையில் மரபிலக்கியங்கள் |
| 5.3.2 | சிங்கப்பூரில் மரபிலக்கியங்கள் |
| 5.3.3 | மலேசியவில் மரபிலக்கியங்கள் |
| **5.4** | **சிறந்த சிறுகதைகள்** |
| 5.4.1 | தமிழில் சிறுகதைகள் |
| 5.4.2 | இலங்கையில் சிறுகதைகள் |
| 5.4.3 | சிங்கப்பூர் சிறுகதைகள் |
| 5.4.4 | மலேசியச் சிறுகதைகள் |
| **5.5** | **விருதாளர்களும் சிறந்த படைப்புகளும்** |
| 5.5.1 | சாகித்திய அகாதெமி விருது |
| 5.5.2 | சாகித்திய அகாதெமி வழங்கும் பிற விருதுகள் |
| 5.5.3 | ஞானபீட விருது |
| 5.5.4 | குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் விருதுகள் |
| 5.5.5 | தமிழக அரசின் விருதுகள் |
| **5.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

# 5.0 பாட முன்னுரை

## பாட முன்னுரை

'கற்க கசடறக் கற்பவை' என வாழ்க்கைக் கல்வி கூறும் வள்ளுவர், 'நிற்க அதற்குத் தக', செவிச்செல்வம் என விளக்குவதும் இலக்கியக் கல்விக்கே மிகவும் பொருந்தும். மனித இனம் பேசத் தொடங்கிய நாளிலிருந்தே எல்லையற்ற தொடர்புகளுக்கு வழிகோலும் அமைப்புகளான மொழிகள் பரவத் தொடங்கின. மொழிகள் ஒவ்வொரு மனிதருக்கும் சமுதாயத்திற்கும் சொந்தமான எண்ணத் தொகுப்புகள் ஆகும். இவ்வெண்ணத் தொகுப்புகள் கலைவடிவம் பெற்றபோது 'இலக்கியங்கள்' என்று அழைக்கப்பட்டன.

இலக்கியம் மனித உணர்வின் புலப்பாடு; அவன் படைத்த, படைக்கும் கலைகளில் எல்லாம் சிறந்து நிற்கும் சாதனை; தன்னை உருவாக்கிய நல்லுணர்வுகளை மேலும் விழுமிய நலங்களாக்கித் தரும் விந்தைமிகு கருவி; ஒரு மொழியில் தோன்றிய சிந்தனையை உலகச் சிந்தனையாக்கும் பொது உடைமை; மனித குலப் பண்பாட்டைப் பேணிக் காத்துவரும் களஞ்சியம்; கற்பனைச் சிறகுகளை விரிக்கப் புதுப்புது வானங்களைத் தேடும் முடிவற்ற பயணம்.

படைப்பாளியின் அனுபவத்திற்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப, சமுதாய விழைவிற்கும் காலத்தேவைக்கும் தக்க இலக்கியங்களும் பலப்பலவாய் அமைந்து வந்துள்ளன. அச்சுக் கலை பரவிய பின்னர், இலக்கிய ஆக்கங்கள், உலகச் சிந்தனை அரங்கில் மிகப்பெரிய தாக்கங்களை உருவாக்கித் தந்துள்ளன.

தமிழ் இலக்கியம் என்பது தற்போது தமிழ்நாட்டில் மட்டும் படைக்கப்படுவதோ படிக்கப்படுவதோ அல்ல. பல்வேறு நாடுகளில் கலாச்சார, பண்பாட்டுச் சூழலில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் அனுபவித்ததையும் சொந்த ஈடுபாடு, ஆர்வம், அக்கறையின் அடிப்படையில் எழுதுகிறார்கள். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் சிலர் தற்போது எழுத்தாளர்களாக வெளியுலகிற்குத் தெரிய ஆரம்பித்துள்ளனர்.

உலகளாவிய அளவில் தமிழ்ப் படைப்பாளர்களையும் அவர்களின் படைப்புகளையும் அவர்கள் பெற்ற விருதுகளையும் அறிமுகப்படுத்தும் வகையில் இவ்வியல் அமைகிறது.

## 5.1 குழந்தை இலக்கியங்கள்

### குழந்தை இலக்கியங்கள்

குழந்தை இலக்கியம் என்றாலே குழந்தைகள் மட்டும் படிப்பதற்கு என்று எண்ணிவிடக் கூடாது. குழந்தைகள் பற்றி எழுவதே குழந்தை இலக்கியம் ஆகாது. குழந்தைகள் படிப்பதற்கு ஏற்றன படைப்பதே குழந்தை இலக்கியமாகும். இந்த இலக்கியம் எழுதுவது அவ்வளவு எளிதன்று; பொறுமை, பொறுப்பு, புலமை என்பன இவ்விலக்கியம் படைக்கத் தேவை. தாத்தா பாட்டிகளிடம் கதை கேட்க முடியாத குடும்பச் சூழலில் நடந்த மாற்றமும், அச்சுக் கலை உருவானதும் தான் சிறுவர் இலக்கியம் உருவாக முதன்மைக் காரணங்களாகும். தமிழில் குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சியினைக் காணலாம்.

### 5.1.1 தமிழில் குழந்தை இலக்கியங்கள்

இந்திய மொழிகளில் தமிழ்மொழியில் மட்டும்தான் குழந்தை இலக்கியம் மிகப்பெரும் அளவில் வழங்கி வருகிறது. தமிழில் குழந்தை இலக்கியம் அல்லது சிறுவர் இலக்கியத்தை முதலில் படைத்தவர் ஔவையார். அவரின் "ஆத்திசூடி" குழந்தை இலக்கியத்துக்கு உரிய எளிமை, இனிமை, சிறிய தொடர்கள், சிறந்த கருத்துகள் ஆகியவற்றைக்கொண்டு விளங்குகின்றன. ஆத்திசூடியைத் தொடர்ந்து அவரின், கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, கல்வி ஒழுக்கம் போன்றவையும் குழந்தை இலக்கியத்தில் அடங்கும். இந்நூல்கள் எல்லாம் சிறார்களை நல்வழிப்படுத்துவன. இரண்டு சொற்களில் ஒரு வரியில், இரண்டு வரிகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த பெருமையும், அகரவரிசைப்படுத்தி, குழந்தைகளின் மனத்தில் எளிதில் பதியும்படி பாடல்களைப் பாடிய பெருமை ஔவையார் ஒருவருக்கே உரியது.

அவரைத் தொடர்ந்து, நீதிநெறிகளை எளிமையாக்கி மனத்தில் பதிய வைக்கும் பாடல்களை அதிவீரராம பாண்டியனார் (வெற்றிவேற்கை), உலகநாதர் (உலகநீதி) ஆகியோர் தந்தனர். குழந்தைகள் தாமே விரும்பிப் படிக்கும்வண்ணம், கற்கும்வண்ணம், பாடும்வண்ணம் பாடல்கள் அமைந்துள்ளமை பெருஞ்சிறப்பாகும்.

20ஆம் நூற்றாண்டில் கவிமணியின் 'மலரும் மாலையும்', பாரதியின் 'பாப்பா பாட்டு', பாரதிதாசனின் 'இளைஞர் இலக்கியம்' ஆகியவை தொடர்ச்சியாக

எழுந்தன. இவர்கள் குழந்தை இலக்கியம் என்ற நோக்கோடு பாடவில்லை எனினும் குழந்தை இலக்கியத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதற்குப் பின் கா.நமச்சிவாய முதலியார், மணிமங்கலம் திருநாவுக்கரசு, மயிலை சிவமுத்து, அ.கி.பரந்தாமனார், எம்.வி.வேணுகோபால் ஆகியோர் குழந்தை இலக்கியம் படைத்தனர். அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றிப் பலர் இன்று வரையில் தொண்டு செய்து வருகிறார்கள். ஆயினும் தமிழில் குழந்தை இலக்கியம் ஆழமும் அகலமும் சிறப்பாகப் பெற்றிட 'மலரும் உள்ளம்' தந்த அழ. வள்ளியப்பாவின் பங்கும் பணியும் போற்றத்தக்கது.

## அழ. வள்ளியப்பா

முழு வீச்சாகக் குழந்தைகளுக்காக மட்டுமே எழுதியவராக அழ. வள்ளியப்பா திகழ்ந்தார். இவர்தம் 13ஆவது வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கியவர். ஏறக்குறைய 60 நூல்கள் படைத்துள்ளார். குழந்தை எழுத்தாளர் சங்கம் நிறுவியது இவரது பெருஞ்சாதனை. இவரது முதல் நூல் **மலரும் உள்ளம். பாட்டிலே காந்தி, பாப்பாவுக்குப் பாட்டு, பெரியோர் வாழ்விலே, நல்ல நண்பர்கள் (கதை), சின்னஞ்சிறு வயதில், பிள்ளைப்பருவத்திலே** என்பன அவர் இயற்றிய சில நூல்களாகும். மேலும் 1950இல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவினார். சிறார் இலக்கியத்தில் இயங்குவதற்கான தளமாக இந்தச் சங்கம் தமிழ்ச் சிறார் உலகில் திகழ்ந்தது

**வட்டமான தட்டு**
**தட்டு நிறைய லட்டு**
**லட்டு மொத்தம் எட்டு**
**எட்டில் பாதி விட்டு**
**எடுத்தான் மீதி கிட்டு**
**மீதம் உள்ள லட்டு**
**முழுதும் தங்கை பட்டு**
**போட்டாள் வாயில் பிட்டு**
**கிட்டு நான்கு லட்டு**
**பட்டு நான்கு லட்டு**
**மொத்தம் தீர்ந்தது எட்டு**
**மீதிக் காலித் தட்டு**

**(அழ.வள்ளியப்பா, மலரும் உள்ளம், ப.28)**

அழ. வள்ளியப்பாவை முன்னோடியாகக் கொண்டு பலர் இன்றும் குழந்தை இலக்கியத்தை உருவாக்கி வருகின்றனர்.

### 5.1.2 அயலகக் குழந்தை இலக்கியங்கள்

இந்திய மொழிகளில் தமிழ்மொழி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களின் தாய்மொழியாக உள்ளது. இந்த நாடுகளில் தமிழ்ப் படிப்பும் உள்ளது. தமிழ் இலக்கியப் படைப்பும் உள்ளது. கடந்த 60 ஆண்டுக்கும் மேலாகத் தமிழில் குழந்தை இலக்கியம் படைக்கும் முயற்சியில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்போன்ற வெளிநாடுகளிலுள்ள கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பணியினைக் காணலாம்.

### 5.1.3 இலங்கையில் குழந்தை இலக்கியம்

இலங்கையில் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் மக்களும் தமிழ்மொழியும் வாழ்ந்து வரும் நாடு அது. அந்நாட்டில்க. சோமசுந்தரப்புலவர், குழந்தைகளுக்கான ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, புளுக்கொடியல், பவளக்கொடி, இலவுகாத்த கிளி உள்ளிட்ட ஏராளமான பாடல்களை இயற்றி சிறுவர் இலக்கிய முன்னோடி என்ற பெருமை பெற்றார். தாடி அறுந்த வேடன், எலியும் சேவலும் உள்ளிட்ட இவரது கதைப் பாடல்கள் சிறுவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பவை.

**கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று**
**காவல் புரிகின்ற சேவகா! – நின்று**
**காவல் புரிகின்ற சேவகா!**
**மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்**
**வேலை புரிபவன் வேறுயார்! – உன்னைப்போல்**
**வேலை புரிபவன் வேறுயார்? (நவாலியூர் சோமசுந்தரப்புலவர்)**

இலங்கையில் குழந்தைகள் விரும்பும் பல பாடல்களைத் தொகுத்து 1935ஆம் ஆண்டு "பிள்ளைப்பாட்டு" என்னும் பெயரில் வெளிவந்தது. கே.எஸ்.அருணந்தி என்னும் கல்வித்துறை அலுவலர் பதிப்பித்த இந்நூலில் 12 கவிஞர்கள் பாடிய 74 பாடல்கள் உள்ளன. இலங்கையிலுள்ள மட்டக்களப்பிலிருந்து 1965ஆம் ஆண்டு மற்றொரு தொகுப்பு நூல்வந்தது. திமிலை மகாலிங்கம் பதிப்பித்த "கனியமுது" என்னும் இத்தொகுதியில் 41 கவிஞர்களின் குழந்தைப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

சிறுவர்க்கான பாடல்கள் பலவற்றை அழகாகப் பாடித் தந்தவர்களில் வேந்தனார் என்பவர் குறிப்பிடத்தக்கவர். பள்ளிக்கூடச் சிறுவன் தன் தாயைப் போற்றுவதாகப் பாடியுள்ள பாட்டு ஒன்றில், பள்ளிக்கூடம் விட்டுச் சிறுவன் வீட்டுக்குத் திரும்பும்போது தாய் எதிரே பாதி வழி வந்து மகனைத் தூக்கித் தோள் ஏந்திச்சென்று மகிழ்வதை உருக்கமாகப் பாடியுள்ளார். எளிய சொற்களில் அந்த உருக்கம் இனிமையாக அமைந்து, சிறுவன் கூறும் மொழியாகவே உள்ளது:

**பள்ளிக் கூடம்விட்ட நேரம்**
**பாதி வழிக்கு வந்து**
**துள்ளி ஓடும் என்னைத் தூக்கித்**
**தோளில் போடும் அம்மா.**

சச்சிதானந்தம் முதலான சிலரும் நல்ல கற்பனைகளை அமைத்து நயமாகப் பாடல்கள் தந்துவருகின்றனர்.

### 5.1.4 சிங்கப்பூரில் குழந்தை இலக்கியம்

சிங்கப்பூரில் குழந்தை இலக்கியம், செய்தித்தாள், வானொலி இவற்றின்மூலம்தான் வளர்ந்தது. சிங்கப்பூரில் குழந்தை இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் கவிஞர் ந. பழநிவேலு. இவரின் தாய், தந்தை என்னும் இரு குழந்தைப் பாடல்களும் 1937இல் தமிழ்முரசு என்னும் நாளிதழில்தான் வெளிவந்தன. மேலும் பல காலக்கட்டத்திலும் எழுதிய பாடல்களின் தொகுப்பைப் 'பாப்பா பாடல்கள்' என வெளியிட்டார். இவரை அடுத்து பாவலர் கா. பெருமாள் எழுபதுகளிலேயே குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்பப் பாடல்கள் இயற்றினார். இவரின் 'சிங்கப்பூர்ப் பாடல்கள்' என்னும் கவிதைத் தொகுப்பில் குழந்தைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

மெ.இளமாறன் குழந்தைகளின் மகிழ்ச்சியை முன்னிறுத்தித் 'திங்கள் – மாணவர் பாத் தொகுப்பு', 'பனிக்கூழ்' (1988) என்னும் இரு நூல்களைப் படங்களுடன் வெளியிட்டார். இவரது பனிக்கூழ் நூலில் இடம்பெற்ற,

**பனிக்கூழ் பனிக்கூழ் பார் பார் பலவகைப்**
**பழம்பால் கொக்கோ சேர்ந்தது சுவை சுவை!**
**ஆங்கில மொழியில் ஐசுக்ரீம் என்பார்**
**அதைநாம் தமிழில் பனிக்கூழ் என்போம்!**

என்னும் பாடலே நூலின் தலைப்பாகவும் அமைந்துள்ளது. இவர்களைப் போன்று பரணன், முத்துமாணிக்கம், பெரி நீல பழநிவேலன், ஆ.பழனி போன்றோர் சிறுவர் பாடல்களை இயற்றியுள்ளனர்.

அடுத்தாகக் குழந்தைகளுக்கெனக் கதைகளைச் செய்தித்தாள்களில் படைத்தவர் "இராகி" ஒருவரே. இவர் இருபதுக்கும் மேற்பட்ட சிறுவர் கதைகளைத் தீட்டியுள்ளார். இவர் கதைகள் 2002இல் நூல் வடிவமாக வெளிவந்துள்ளன.

### 5.1.5 மலேசியாவில் குழந்தை இலக்கியங்கள்

சிங்கப்பூரைப் போன்றே மலேசியாவிலும் குழந்தை இலக்கியங்கள் வளர்ச்சிபெற நாளிதழ்களும் வானொலியும் பெரும் பங்கு வகித்தன.

**தக்க வழிநடப்போம் – ஒரு**
**தாயின் பிள்ளைகள் போல்!**
**ஒக்க உழைத்திடுவோம் – தம்பி**
**ஓர் குலமாயிருப்போம்.**

கவிஞர் தேவதாசன் வழங்கிய இச்சிறுவர் பாடலே மலேசியச் சிறுவர் இலக்கியத்தின் முதல் பாடலாய்த் திகழ்கிறது. மலேசியாவில் மிகவும் குறிப்பிடத்தக்க குழந்தைக் கவிஞர் பாப்பா புலவர் முரசு நெடுமாறனார் ஆவார். மலேசியத் தமிழ் கவிதையிலக்கியத்தில் நிறைய குழந்தை இலக்கியங்களைப் படைத்தவரும் இவரே. மலேசியாவின் நூற்றாண்டுகாலக் கவிதைத் தொகுப்பினை **"மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்"** என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். இவரைத் தொடர்ந்து குழந்தை இலக்கிய எழுத்தாளர்கள் பலர் உள்ளனர். இவர்களுள் முதன்மையானவர் மா.சி. அண்ணாமலை என்ற இயற்பெயர் கொண்ட சோமசன்மா ஆவார். '**கவிச்சுடர்', 'மலேசியக் கவியரசு**' என்ற பல சிறப்புப் பட்டங்களைக் கொண்டவர். இவரின் பாடல்கள் பெரும்பாலும் மொழிப்பற்றை ஊட்டுவனவாக அமைந்தன.

**எ.கா :**

**தாய்மொழியில் பற்றுகொண்டு நடநட தம்பி**
**தாய்மொழியை மறக்க வேண்டா நட நட**

மலேசியக் குழந்தை இலக்கிய எழுத்தாளர்களுள் பலர் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களாக இருந்தனர். சி. வேலு சுவாமி, கவிஞர் பரிதி, பொன்முடி என்ற கெ. சுப்பிரமணியன், மதிதாசன், மா. இராமகிருஷ்ணன், லாபீஸ் மாயவன், எம். பகதூர்,

தமிழ்க்குயில் கலியபெருமாள், கு. கிருஷ்ணன், ஜோசப் செல்வம், ந. சிவராமன், ஆ. சின்னத்தம்பி, சி. காவேரிநாதன், தங்கா தமிழ்ப்பாணன், கோவி. தியாகராசன் என்று படைப்பாளர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்றியதனால் இவர்கள் குழந்தைகளின் உள்ளங்களைப் புரிந்துகொண்டு, பாடல்களைக் குழந்தைகளின் தேவைக்கும் தகுதிக்கும் ஏற்பப் பாடினர்.

மலேசியக் குழந்தை இலக்கிய உலகில் மு. கந்தன் என்னும் இயற்பெயரைக் கொண்ட கவிஞர் பரிதியின் 'முழுநிலா' என்ற மலேசியச் சிறுவர்களுக்காக எழுதப்பட்ட பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூலே முதல் நூலாக விளங்குகிறது. முரசு. நெடுமாறன், சி. வேலுசுவாமி ஆகியோர் தங்கள் எழுத்துகளை நூல் வடிவில் வெளியிடக் கவிஞர் பரிதி முன்னோடியாவார். இருபது கவிதைகளைக் கொண்ட இந்நூலில் பறவைகள், இயற்கை, நன்னெறிகளைப் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

எ.கா :

**நீலக்கடலில் ஊர்ந்து செல்லும்**
**ஜாலம் மிக்க ஓடம்போல்**
**ஞாலம் வியக்க நீந்திச் செல்லும்**

## 5.2 சிறந்த புதுக்கவிதைகள்

### சிறந்த புதுக்கவிதைகள்

**சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது**
**சொற்புதிது சோதி மிக்க நவகவிதை.**

எனப் பாரதியார் மரபுக் கவிதையில் விடுத்த அழைப்புதான், புதுக்கவிதை வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாய் அமைந்தது. இதனை, சாலை இளந்திரையன் உரை வீச்சு எனக் கூறுவார்.

எதுகை, மோனை வரையறைகளைக் கடந்து, வேண்டாத சொற்களைத் தவிர்த்துச் சுவை மிளிர நடைமுறைச் சொற்களால் கருத்தை உணர்த்துவது புதுக்கவிதையாகும்.

### 5.2.1 தமிழில் புதுக்கவிதைகள்

மேனாட்டாரின் இலக்கியத் தாக்கத்தால் இருபதாம் நூற்றாண்டளவில் தமிழ்மொழியில் சிறந்தெழுந்த வகைப்பாடாகும் இது. புதுக்கவிதை, பாரதியாரின் காட்சிகள் என்னும் வசனக் கவிதைத் தொகுப்பில் தொடங்குகிறது.

**ஞாயிறே, இருளை என்ன செய்து விட்டாய்?**
**ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கி விட்டாயா?**
. . . . . . . . . . . . . . .
**உணர்வே நீ வாழ்க**
**நீ ஒன்று நீ ஒளி**
**நீ ஒன்று நீ பல**
**நீ நட்பு, நீ பகை**
**உள்ளதும் இல்லாததும் நீ**
**அறிவதும் அறியாததும் நீ**
**நன்றும், தீதும் நீ**
**நீ அமுதம், நீ சுவை**
**நீ நன்று, நீ இன்பம்**

பழைய சொற்களில் புதிய கற்பனைக் கோலங்களைப் பயன்படுத்தி அழகும் எளிமையும் உணர்ச்சியும் மீதூரப் பாரதியார் மொழியினைக் கையாளத் தொடங்கினார்.

பாரதியைத் தொடர்ந்து ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் போன்றோர் புதுக்கவிதை படைக்கலாயினர். புதுக்கவிதைகள், பத்திரிகைகளில் வெளியிடப் பெற்றுப் படிப்படியாகச் செல்வாக்குப் பெற்றன.

கி.பி.1930–1945 காலகட்டத்தில் **மணிக்கொடிக்** குழுவினர், பாரதியாரை அடுத்துப் புதுக்கவிதை இயற்றியவர்களாவர். அவர்களுள் கு.ப.இராசகோபாலன், ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். **மணிக்கொடி** இதழின் காலக்கட்டத்திலேயே **ஜெயபாரதி, சூறாவளி, கிராம ஊழியன், கலாமோகினி** போன்ற இதழ்களிலும் புதுக்கவிதைகள் பல இடம் பெற்றன.

கி.பி.1950–1970 ஆண்டுகளில் இரண்டாம் நிலை வளர்ச்சி அமைந்தது என்பார் ந.சுப்புரெட்டியார். **எழுத்து, இலக்கிய வட்டம், நடை** போன்ற இதழ்களில்

புதுக்கவிதைகள் வெளிவந்தன. 1962ஆம் ஆண்டு புதுக்கவிதை வரலாற்றில் சிறப்புடையதாகும்.

எழுபதுகளில் **தாமரை, கசடதபற, வானம்பாடி** போன்ற இதழ்களில் புதுக்கவிதைகள் வெளியிடப் பெற்றுச் சிறப்புற்றன. **புள்ளி, வெள்ளம், உதயம், கதம்பம், ரசிகன், நீ, அலைகள், ஐ** என்னும் புதுக்கவிதைச் சிறு தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. புதுக்கவிதை நூல்கள் பலவும் எழுபதுகள் தொடங்கி வெளிவரலாயின. அவற்றுள் சில:

1. ந.பிச்சமூர்த்தி – காட்டுவாத்து
2. வேணுகோபாலன் – கோடை வயல்
3. வைத்தீஸ்வரன் – உதய நிழல்
4. நா.காமராசன் – கறுப்பு மலர்கள்
5. இன்குலாப் – இன்குலாப் கவிதைகள்
6. ஞானக்கூத்தன் – அன்று வேறு கிழமை
7. கலாப்ரியா – தீர்த்த யாத்திரை
8. சி.சு.செல்லப்பா – புதுக்குரல்கள்
9. தமிழன்பன் – தோணி வருகிறது
10. வல்லிக்கண்ணன் – அமர வேதனை
11. ப.கங்கை கொண்டான் – கூட்டுப் புழுக்கள்
12. சி.மணி – வரும் போகும்

தற்காலத்தில் புதுக்கவிதை ஹைக்கூ (துளிப்பா), சென்ரியு (நகைத் துளிப்பா), லிமரைக்கூ (இயைபுத் துளிப்பா) என்னும் வகைகளில் நாளும் தழைத்து வருகின்றன.

### 5.2.2 இலங்கையில் புதுக்கவிதை

இலங்கைக் கவிஞர்களின் புதுக்கவிதைகள், சொற்செட்டும் வீரியமும் கொண்டு சொந்த வெளிப்பாட்டுடன் பொதுத்தன்மையும் கொண்டு விளங்குகின்றன என்கிறார் சா. கந்தசாமி. மஹாகவியில் இருந்து, முருகையன், நீலவண்ணன், ஜெயபாலன், சேரன், தர்மு சிவராமு, சிவரமணி என்று பலரும் புதுக்கவிதையில் சிறந்து விளங்குகின்றனர் தமிழகத்திலே பாரதிக்குப் பின்னர் இலக்கிய முதிர்ச்சியுள்ள கவிதைகள் எழுதியோர் செய்யுளை நிராகரிக்கும் பிச்சமூர்த்தி வழிவந்த புதுக்கவிஞர்களாகவே இருப்பதுபோல் ஈழத்தில் இலக்கிய முதிர்ச்சியுள்ள கவிதைகள் எழுதியோர் செய்யுளைப் பயன்படுத்திய மஹாகவி வழிவந்த நவீன கவிஞர்களேயாவர் என்பது முதன்மைக் கவனத்திற்கு உரியது.

**ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே**
**வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை**
**என்று**
**வந்தான் ஒருவன்... (தேரும் திங்களும், மஹாகவி)**
**ககனப் பறவை**
**நீட்டும் அலகு**
**கதிரோன் நிலத்தில்**
**எறியும் பார்வை**
**கடலுள் வழியும்**
**அமிர்தத் தாரை**
**கடவுள் ஊன்றும்**
**செங்கோல். (மின்னல், தர்மு சிவராமு)**

1970க்கு முன்பே ஈழத்துக் கவிதை உலகில் புதுக்கவிதை / வசன கவிதைப் போக்கு இருந்தது. இன்று தென்னிந்திய இலக்கியத்துடன் தன்னை முற்றிலும் இணைத்துக்கொண்ட புதுக்கவிதையாளர் தருமு சிவராமு ஈழத்தவரே. 60களில் மு. பொன்னம்பலம், கே.எசு. சிவகுமாரன், தா. இராமலிங்கம் முதலியோரும் புதுக்கவிதைகள் எழுதினர். தா. இராமலிங்கம் முதன்மை கவனத்துக்குரிய தனித்துவமான புதுக்கவிதை கவிஞர் ஆவார். இவரது புதுமெய்க்கவிதைகள், காணிக்கை ஆகிய இரு நல்ல புதுக்கவிதைத் தொகுதிகள் வெளிவந்தன. புதுக்கவிதை, ஈழத்திலும் **மறுமலர்ச்சி, பாரதி, ஈழகேசரி, மல்லிகை, கவிதை** போன்ற இதழ்களில் சிறப்புற வளர்ந்து வந்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

மு. கனகராசனின் 'முட்கள்', அன்பு சவகர்சாவின் 'காவிகளும் ஓட்டுண்ணிகளும்', திக்வல்லைக்காமலின் 'எலிக்கூடு', மேமன் கவியின் 'யுகராகங்கள்', சௌமினி, சிவம் ஆகியோரின் 'கனவுப்பூக்கள்', பேனா மனோகரனின் 'சுமைகள்', மூதூர் முகையதீனின் 'முத்து', லோகேந்திரலிங்கத்தின் 'போலிகள்', செந்தீரனின் 'விடிவு', பூநகர் மரியதாஸின் 'அறுவடை' முதலிய புதுக்கவிதைத் தொகுப்புகள் 1970க்குப் பின்னர் வெளிவந்துள்ளன. தொகுப்புகள் எதுவும் வெளியிடாதபோதிலும் சபா–ஜெயராசா, சாருமதி, ஜவாத் மரைக்கார் முதலிய அனேகர் இங்கு புதுக்கவிதை எழுதிவருகின்றனர். அன்பு ஜாவகர்ஷா தொகுத்த பொறிகள், சரவணையூர் சுகந்தன் தொகுத்த 'சுவடுகள்' ஆகிய புதுக்கவிதைத் தொகுப்புகளில் ஐம்பதுக்கும் அதிகமான கவிஞர்களின் படைப்புகள் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 5.2.3 சிங்கப்பூர் புதுக்கவிதைகள்

சிங்கப்பூரில் புதுக்கவிதையின் முன்னோடியாகத் திகழ்பவர் க. இளங்கோவன். விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து என்னும் இவரின் நூல் 1979ஆம் ஆண்டு வெளியாகியது. மௌனவதம் (1984), TRANS CREATIONS (1988) முதலிய நூல்களையும் இவர் படைத்துள்ளார். TRANS CREATIONS என்னும் இவரது நூலில் இவரே ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொடுத்துள்ளார். இவர் படிமக் கவிதைகளையும் இருண்மை மிக்க கவிதைகளையும் படைப்பதில் வல்லவர். நையாண்டி, எள்ளல் முதலிய சுவைகளைத் தம் கவிதை வழி தருபவர். சிங்கை அரசியல் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் துணிவாகச் சாடி இருப்பதை இவர் கவிதைகளில் காணலாம். ஆங்கில இலக்கியப் புலமையின் வெளிப்பாடும் பிறமொழிக் கலப்பும் இவரது கவிதைகளில் இடம்பெற்றுள்ளன.

புதுக்கவிதை ஆசிரியர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மற்றொருவர் க.து.மு.இக்பால். இவர் மரபுக் கவிதைகளோடு புதுக்கவிதைகளையும் படைத்து வருகிறார். தமது முகவரி என்னும் நூலில் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் இடம்பெறச் செய்துள்ளார். இவரைப் பின்பற்றிப் பிச்சினிக்காடு இளங்கோ புதுக்கவிதைகளைப் பாடி வருகிறார். இளந்தலைமுறையைச் சார்ந்து இன்று புதுக் கவிதைகளைப் பலர் படைத்து வருகின்றனர். அமீருத்தீன், V.S.தாஜூதீன், முகமது அலி, அழகிய பாண்டியன், ராஜசேகர், ரவி, ஞானப் பிரகாசம் மொனிக்கா, சி.மீனாட்சி முதலியோரும் தங்கள் புதுக்கவிதைகளை நூல் வடிவம் பெறச் செய்துள்ளனர். லதா, ஷாகுல் ஹமீது, மலர்தமிழ் முதலியோரும் புதுக்கவிதைகள் படைத்து வருகின்றனர். ஞாயிறு தோறும் தமிழ்முரசில் பலரும் புதுக்கவிதைகள் எழுதி வருகின்றனர். வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் பற்றிய செய்திகள் இதில் இடம்பெறுகின்றன.

### 5.2.4 மலேசியப் புதுக்கவிதைகள்

மலேசியா விடுதலை அடைந்தபின் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1963) தோற்றம் கண்டது. இது புதுக்கவிதை இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு நல்கியது.

மலேசியத் தமிழ் இலக்கியம் தமிழ்நாட்டு இலக்கியப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டுப் போக்கிற்கேற்ப வடிவு கொண்டு வளரும் ஒரு துறையாக உள்ளது. எனவே தமிழ்நாட்டில் அறுபதுகளில் புதுக்கவிதை

சுறுசுறுப்புடன் வளர ஆரம்பித்த போது, அந்தத் தாக்கம் மலேசிய நாட்டிலும் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் புதுக்கவிதை 30களில் தோன்றி, 15 ஆண்டுகள் நிலவி, அதன்பின் சுமார் 15 ஆண்டுகள் தொய்வு கண்டு, 60களுக்குப் பின்தான் தொடர்ந்து வளர ஆரம்பித்தது. தமிழக புதுக்கவிதையாளர்களான சி.சு. செல்லப்பா, சி.மணி, பசுவையா, தருமு சிவராம், தி.சோ.வேணுகோபாலன், வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன் போன்றவர்களின் புதுக்கவிதைகள், மலேசிய நாட்டு கவிஞர்களுக்கு புதுக்கவிதையின் மேல் ஆர்வம் மேலோங்க காரணமாக அமைந்தன. புதுக்கவிதை எழுதி, மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதை இயக்கத்திற்குப் பிள்ளையார் சுழிபோட்ட பெருமைக்குரியவர் சி.கமலநாதன் அவர்கள். 1964இல் இவர் எழுதிய "கள்ளபார்டுகள்" எனும் புதுக்கவிதையே மலேசியாவின் முதல் புதுக்கவிதை எனப் போற்றப்படுகிறது. அக்கவிதையின் சில வரிகள்:

**"மதியின்றிப் பிதற்றுவதும் – இங்கு**
**உள்ளவரை தின்று, ஊதிப் பெருப்ப தல்லால்**
**உருப்படியாய் செய்வதென்ன?"**

1970களில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஆதி குமணன் ஏற்றார். அவர் நடத்திய "வானம்பாடி" வார இதழ் மலேசியாவில் புதுக்கவிதை வளர களம் அமைத்துத் தந்தது. மலேசியாவில் நடைபெற்ற முதலாவது புதுக்கவிதைக் கருத்தரங்கம், டத்தோ சாமிவேலு பொன்விழா புதுக்கவிதைப் போட்டி, மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை புதுக்கவிதை அரங்கு போன்றவை நிகழ்ந்து கவிதையுலகில் மறுமலர்ச்சி ஏற்படுத்தின.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. குழந்தை இலக்கியங்கள் பற்றி குறிப்பு வரைக. |
| 2. அழ.வள்ளியப்பா பற்றிக் கூறுக. |
| 3. இலங்கையில் குழந்தை இலக்கியம் தோன்றியதைக் குறித்து எழுதுக |
| 4. புதுக்கவிதை – சிறுக் குறிப்பு வரைக. |
| 5. சிங்கப்பூர் புதுக்கவிதைகள் பற்றிக் கூறுக. |
| 6. மலேசியப் புதுக்கவிதைகள் குறித்து எழுதுக. |

## 5.3 மரபிலக்கியப் படைப்புகள்

### மரபிலக்கியப் படைப்புகள்

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மரபுக்கவிதை/ மரபு இலக்கிய வடிவம் இன்றும் நிலைபெற்று வருகின்றது. இலக்கியம் என்றாலே அது மரபுக்கவிதைதான் என்று விளங்கிய கால கட்டங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் காண முடிகின்றது.

**தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்**
**சூழ்கலை வாணர்களும் – இவள்**
**என்று பிறந்தவள் என்றுண ராத**
**இயல்பின ளாம்எங்கள் தாய்.**

எனப் பாரதியார் பாடும் பாடல் மரபுக்கவிதையின் காலத் தொன்மைக்கும் பொருந்தக் கூடியதாகும். சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தமிழிலக்கிய நெடும்பரப்பில் செங்கோல் செலுத்தி வந்த பெருமை, மரபுக்கவிதைக்கே உரியது. சங்க இலக்கியம், காப்பியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் என்னும் யாவும் மரபுக் கவிதைகளால் ஆனவையே ஆகும்.

பாரதியார் காலந்தொட்டு வரும் மரபுக்கவிதை படைப்பாளர்களும் அவர்தம் படைப்புகளும் குறிப்பிடத்தக்க சிறப்புடையனவேயாகும்.

1. பாரதியார் – பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு
2. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை – ஆசியசோதி, மருமக்கள்வழி மான்மியம்
3. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை – தமிழன் இதயம், கவிதாஞ்சலி
4. பாரதிதாசன் – பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு
5. கண்ணதாசன் – இயேசு காவியம், மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி
6. சுத்தானந்த பாரதியார் – பாரதசக்தி மகாகாவியம், தமிழ்த் திருப்பாவை
7. சுரதா – சிரிப்பின் நிழல், தேன்மழை, துறைமுகம்
8. அழ.வள்ளியப்பா – மலரும் உள்ளம், பாட்டிலே காந்தி
9. வாணிதாசன் – கொடி முல்லை
10. வைரமுத்து – வைகறை மேகங்கள்

**'நற்றமிழ், தெளிதமிழ், வெல்லும் தூயதமிழ்'**போன்ற இலக்கிய இதழ்களில் வல்லமை படைத்த மரபுக் கவிஞர்களின் படைப்புகளும், போட்டிக் கவிதைகள் பலவும் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கவியரங்குகளில் மரபுக் கவிதைகள் சிறப்பிடம் பெறுகின்றன. **'பாரதியார் பிள்ளைத் தமிழ், காமராசர் பிள்ளைத் தமிழ், சிவாஜிகணேசன் பிள்ளைத் தமிழ்'** என்பன போன்ற மரபுவழி இலக்கியங்கள் இன்றும் படைக்கப் பெற்று வருகின்றன.

மருதூர் அரங்கராசனின் 'யாப்பறிந்து பாப்புனைய' என்னும் நூல் இன்றைய நிலையில் மரபுக்கவிதை படைப்பவர்க்கு ஏற்ற வகையில் இயற்றப்பெற்றுள்ளது.

### 5.3.1 இலங்கையில் மரபிலக்கியங்கள்

ஆறுமுகநாவலரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட செய்யுள், பிரபந்த நடையினை ஈழத்தில் தொடக்கக் கால கவிதை எழுத்தாளர்களிடம் காணமுடிகின்றது. அ.குமாரசுவாமிப் புலவர், சுவாமி.விபுலாநந்தர், வித்துவ சிரோன்மணி. சி.கணேசையர், அருள்வாக்கு அப்துல் காதிர் புலவர், மாதகல் மயில்வாகனப் புலவர், கல்லடி வேலுப்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆகியோரின் கவிதைகள் இத்தகைய மரபு நிலைப்பட்டன.

மரபுக் கவிஞராக இனங்காணப்பட்ட சுவாமி.விபுலாநந்தர், பாரதியின் தாக்கத்தினால் உந்தப்பட்டு கவிதை உலகில் காலடி எடுத்து வைத்தவர். 'கங்கையில் விடுத்த ஓலை, நீரரமகளிர், ஈசன் உவந்தளிக்கும் இன்மலர்' போன்ற மரபுக் கவிதைகளினை எழுதிப் புகழடைந்தவர். இவருடைய வரிசையில் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் 'பகவத்கீதை வெண்பா'வும் குறிப்பிடத்தக்கது. 'வெண்பாவிற் புலவர்மணி' எனப் பிற்காலத்தில் பலரும் அழைக்க இம்மரபுக் கவிதையே காரணமாக இருந்ததெனலாம்.

### 5.3.2 சிங்கப்பூரில் மரபிலக்கியங்கள்

சிங்கப்பூர் குடியரசான பின்பு கவிஞர்கள் தங்கள் படைப்புகளைத் தமிழ் முரசு, வானொலி ஆகியவற்றின் வழியாகத் தந்தனர். தற்போதும் தந்து வருகின்றனர் என்பதனை முன்பே கண்டோம். இதுவரை 75க்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

சிங்கப்பூர் மரபுக் கவிதை ஆசிரியர்களுள் முன்னோடிக் கவியாக விளங்குபவர் ந. பழநிவேல். மனித நேயத்தோடு கவித்துவத்தையும் குழைத்துத் தருபவர் சிங்கை முகிலன். சந்தக் கவிதைகளை வழங்குபவர் ஐ.உலகநாதன். இயற்கையைப் பாடுவதில் சிறப்புறுபவர் க.து.மு.இக்பால். இறைவனை உருகிப் பாடி இறை உணர்வை ஏற்படுத்துபவர் முருகதாசன். சமுதாயச் சிந்தனைகள் ததும்ப, வண்ண வண்ணக் கவிதைகளை வழங்கியவர்கள் பரணன், இளமாறன், திருவேங்கடம் முதலியோர் ஆவர். செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கவிதை அமைப்பவர் தங்கராசன். வெண்பாச் சிற்பி என்னும் பெயர்க்கு ஏற்ப வெண்பாக்களை அள்ளி வழங்குபவர் இக்குவனம். இவர்களைப் போன்று கவிஞர்கள் பலரும் கவிதைகளைப் படைத்துச் சிங்கை இலக்கியத்திற்குச் சிறப்பு சேர்த்துள்ளனர்.

### 5.3.3 மலேசியாவில் மரபிலக்கியங்கள்

மலேசியத் தமிழ் இலக்கியம் என்றாலே அது சிங்கப்பூரின் தமிழ் இலக்கியப்படைப்புகளும் கலந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஏனெனில் இவ்விரு நாடுகளும் ஒரே காலனித்துவத்தின் கீழ் ஒன்றாக நீண்டகாலம் இருந்துள்ளன. 1966க்குப் பின்னரே தனித்தனி நாடுகளாகச் செயல்படத் தொடங்கின. ஆகவே 1965 வரை இவ்விரு நாடுகளும் ஒரே இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. அவ்வகையில் 1886இல் சிங்கப்பூரைச் சேர்ந்த நாராயணசாமி நாயகன் என்னும் இசைப்புலவரால் பாடப்பெற்ற "இருந்தும் பயமென்ன' எனும் இசைப்பாடலே மலேசிய தமிழ்க் கவிதை இலக்கியத்தில் முதல் தமிழ்க்கவிதையாகும் என்ற ஒரு குறிப்பு தென்படுகிறது. முதல் கவிதைத் தொகுப்பான 'ஆறுமுகப் பதிகம்" நாகபட்டினம் மரு. வேங்கடாசலம்பிள்ளை என்பவரால் 1887இல் இயற்றப்பட்டதாக குறிக்கப்பெறுகிறது. தொடக்க காலங்களின் படைப்புக்களில் பக்தியும், சமயமும், பாடுபொருளாகி, அந்தாதி, பதிகம், மாலை போன்ற மரபு இலக்கிய வகையே கோலோச்சின.

இவற்றில் மலேசிய மண்ணின் மணம் முழுமையாகக் கமழவில்லை. மலேசியத் தமிழர்களின் வாழ்விடமான தோட்டப்புறமும், தோட்டப்புறச் சமுதாயமும், அவர்களின் வாழ்வியலும், வாழ்க்கை முறையும் பிரதிபலிக்கப்படவில்லை என்றாலும் எப்போதோ, எங்கோ ஒன்றிரண்டாக பத்திரிகையில் வெளிவந்த கவிதைகள் சற்றே தோட்டப்புறத் துயரத்தையும் எட்டிப் பார்த்திருக்கின்றன. 6.1.1932இல் தமிழ் நேசனில் வெளிவந்த கவிதை ஒன்று அன்றைய மலாயாவின் தோட்டப்புறத் தொழிலாளியின் பரிதாபக் குரலாக ஒலிக்கிறது. 1930களில் மலாயாவின் பொருளாதாரம் படுவீழ்ச்சி கண்டு இந்தியத்

தொழிலாளர்கள் தமது நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். அந்நிலையில் பால்மரம் சீவும் தொழிலாளி தோட்டத்தினையும் பால்மரத்தையும் விட்டுப் பிரிய மனமில்லாமல் கண்ணீர் சிந்துவதாக அக்கவிதையை தி.ரா.சுப்பிரமணிய ஐயர் இயற்றியுள்ளார்.

**போய்வாரேன் பால்மரமே! போய்வாரேன் பால்மரமே!**
**பவுனுக்கும் பவுன்விலையாய் பாலுவித்த காலம் போச்சே**
**புளிவிலைக்கும் தோற்றுப் போச்சே பாலு வெட்டும் நிறுத்தலாச்சே யார்**
**செய்த மோசம் பாராய் எவரீட்ட சாபம் கூறாய்! (போய்)**
**உன்னை நம்பி வாழ்ந்தவர்கள் எத்தனை பேர்களுண்டு**
**அத்தனை பேர்களுமே அழுதுகொண்டு போறாரே**
**உயிரளவும் மறக்கமாட்டேன் ஊருக்குப் போய்வாரேன்! (போய்)**

இந்நாட்டு மணம் கமழும் இலக்கியம் 1946க்குப் பின்னரே உருவாயிற்று. மணத்தையும் வளத்தையும் அழகையும் செழுமையையும் இலக்கியமாய்ப் படைத்தவர் இந்நாட்டிற் பிறந்து இங்கேயே கல்விகற்ற எழுத்தாளர்களேயாவர். மலேசியக் கவிதை உலகில் மறுமலர்ச்சி சிந்தனைகளைத் தோற்றுவித்த முதல் நூல், மலேசியக் கவிஞர்களுள் மூத்த முதுபெரும் கவிஞர் ந. பழநிவேலு இயற்றிய 'கவிதை மலர்கள்" (1947) ஆகும். இதற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்த்துரை வழங்கினார். அந்நூலில் "சித்தப் போக்கு" என்னும் தலைப்பில் வரும் பாடல், அக்காலப் பாடுபொருளின் பட்டியலாகவே விளங்குகின்றது.

மலேசியா விடுதலைக்குப் பின் மலேசியக் கவிதைகளும் வீறுகொண்டெழுந்து பன்முக வளர்ச்சி கண்டன. இதற்குப் பின்னரே மலேசியத் தமிழர்கள், தங்களுக்கே உரித்தான, தனித்த இலக்கியத்தைப் படைக்கத் தொடங்கினர். பல்வேறு வாழ்வியல் பிரச்சினைகளையும் இயற்கை, காதல், இனவுணர்வு, மொழியுணர்வு, நாட்டுப்பற்று, போன்றனவற்றையும் பாடுபொருளாகப் புனைந்து கவிதைகள் பெருகத் தொடங்கின.

1966இல் வெளிவந்த ஐ. உலகநாதனின் "சந்தனக் கிண்ணம்", சிங்கை முகிலனின் "இதய ஓசை" (1960) போன்ற கவிதைத் தொகுப்புகள், புதிய இலட்சியப் பிடிப்புள்ள சமுதாயத்தைக் காணவிரும்பும் துடிப்பினை வெளிப்படுத்தி, உணர்ச்சிக் கொந்தளிப்பாய் மலர்ந்தன.

**வலிமைக்கு விஞ்சிய உழைப்படா–மக்கள்**
**வயிற்றுக்கும் போதாத உணவடா!**

**எளியோர்க்கு நல்வாழ்வு ஏதடா? அவர்**
**இருக்கும் நிலை தன்னைப் பாரடா. (இதய ஓசை)**
**ஊரெல்லாம் விளக்கெரிய உறங்காமல் விழித்திருந்து**
**தன் வீட்டை இருள்மூழ்க விட்டவன்– இவன்**
**பாரெல்லாம் பிறருக்காக பாடுபட்ட குற்றத்தால்**
**பசிக்கயிற்றால் தூக்கிலிடப்பட்டவன். (சந்தனக் கிண்ணம்)**

மலேசியாவின் இயற்கைச் சூழலையும் தன் "சந்தனக் கிண்ணத்தில்" வைக்கிறார் கவிஞர். அதனைத் தொடர்ந்தே அடுத்தடுத்த காலக்கட்டங்களில் காரைக்கிழாரின் கணைகள்(1977), தீ.சி.பொன்னுசாமியின் தீப்பொறி(1978) என புயலடிக்கத் தொடங்கின. இனவுணர்வும் மொழியுணர்வும் சமுதாயத்தைக் கடுமையாகத் தாக்கும் கணைகளாக நின்றன. அதே தோரணையில் கா.பெருமாள், சி.அன்பானந்தம், கரு.திருவரசு, வெ.பழநி போன்று இன்னும் பல கவிஞர்கள் மலேசியத் தமிழ்க் கவிதை இலக்கியத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியுள்ளனர். இவர்கள் சில குறுங்காவியங்களையும் படைத்து வெற்றி கண்டுள்ளனர்.

## 5.4 சிறந்த சிறுகதைகள்

### சிறந்த சிறுகதைகள்

மக்களின் கதை கேட்கும் ஆர்வம் தொல்பழங் காலந்தொட்டே வேரூன்றியுள்ளது. அதன் பல்வேறு வெளிப்பாடுகளாகப் பலவகை இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. அவ்வகையில் அச்சு இயந்திரங்களின் வருகையால் சிறுகதை என்ற புதிய இலக்கிய வகை உருப்பெற்றது. இன்றைய நிலையில் இலக்கிய உலகில் சிறுகதைகளுக்கென்றே ஒரு தனித்த இடம் உள்ளது. கல்வி அறிவின் வளர்ச்சியும் இதழ்களின் வளர்ச்சியும் மக்களிடையே சிறுகதை படிக்கும் ஆர்வத்தை வளர்த்துள்ளன.

### 5.4.1 தமிழில் சிறுகதைகள்

தமிழில் மேலைநாட்டு மரபை ஒட்டிய நவீனச் சிறுகதை முயற்சிகள் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலத்திலும் தமிழிலும் நாவல் படைத்து வந்த **அ.மாதவையா** 1910ஆம் ஆண்டில் **இந்து** ஆங்கில நாளிதழில் வாரம் ஒரு கதையாக 27 சிறுகதைகளை

எழுதினார். பின்பு இக்கதைகள் 1912இல் **Kusika's Short Stories**என்ற பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. பின்பு அது தமிழில் **குசிகர் குட்டிக் கதைகள்** என்று வெளியிட்டார். சமூகச் சீர்திருத்த நோக்குடன் இக்கதைகளைப் படைத்ததாக மாதவையா அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். **நவதந்திரக் கதைகள், வேணுமுதலி சரித்திரம், மன்மத ராணி, பூலோக ரம்பை, ஆவணி அவிட்டம், ஸ்வர்ண குமாரி, ஆறில் ஒரு பங்கு, காந்தாமணி, ரயில்வே ஸ்தானம்** என்று பல கதைகளை எழுதியுள்ளார். பாரதியார் கதைகள் சம்பவங்களைப் பேசுகின்றனவே தவிர, இவற்றில் சிறுகதைகளுக்குரிய உணர்ச்சி இல்லை என்று பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

**வ.வே.சு. ஐயரின், குளத்தங்கரை அரசமரம்** என்ற கதையே தமிழின் முதல் சிறுகதையாகப் பல விமர்சகர்களால் சுட்டப்படுகின்றது. வ.வே.சு.அய்யர் இக்கதையில் பாத்திர ஒருமை, நிகழ்ச்சி ஒருமை, உணர்வு ஒருமை என்ற மூன்றையும் சிறப்பாக அமைத்துள்ளதாக இலக்கிய விமர்சகர்கள் கூறுகின்றனர். வரதட்சணைக் கொடுமை இக்கதையின் கருப்பொருளாகும். ருக்மணி என்ற பெண்ணுக்குத் திருமணம் ஆகிறது. வரதட்சணைப் பிரச்சினை காரணமாக, சாந்தி முகூர்த்தம் தடைபட்டு, கணவனுக்கு வேறு திருமணம் நிச்சயமாகியது. இதனால் ருக்மணி தற்கொலை செய்து கொள்கிறாள். தன் தவற்றை உணர்ந்த கணவன் துறவு பூணுகிறான். ஒரு மரம் இக்கதையைச் சொன்னதாக அமைந்துள்ளது இதன் தனிச்சிறப்பாகும்.

அவரைத் தொடர்ந்து நாராயணத் துரைக்கண்ணன் முதல் **புதுமைப்பித்தன், கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, மௌனி, கல்கி, ராஜாஜி, கே.எஸ்.வேங்கட ரமணி, சிட்டி, சங்கரராம், லா.ச.ரா.** போன்றவர்களும் சிறுகதை எழுதியுள்ளனர். புதுமைப்பித்தன் சாகாவரம் பெற்ற சிறுகதைகளைப் படைத்து, தமிழ் இலக்கியக் கருவூலத்திற்கு வளம் சேர்த்துள்ளார். ந.பிச்சமூர்த்தியின் கதைகளிலும் சிறுகதையின் வடிவமும் உத்தியும் சிறப்பாக அமைந்துள்ளன. மனித மன ஆழத்தை அவர் தம் கதைகளில் சிறப்பாக வடித்துள்ளார். தி.ஜானகிராமன், தமிழ் எழுத்துலகில் நாவல், சிறுகதை என்ற இரண்டு இலக்கிய வகைகளிலும் முன்வரிசையில் நிற்பவர். கு.ப.ரா.வைப் போன்று ஆண், பெண் உறவைக் கதைப் பொருளாக்கிக் கொண்டவர் ஆவார். கதைமாந்தர் படைப்பிலும், மொழி ஆளுகையிலும் வெற்றி பெற்ற இவர் **மறதிக்கு, செய்தி, முள்முடி, சிலிர்ப்பு** போன்ற பல கதைகளை எழுதியுள்ளார்.

திராவிட இயக்கச் செல்வாக்குடன் பகுத்தறிவுப் பாதையில் கதை படைத்தவர்களுள் அண்ணா, மு.கருணாநிதி, ஆசைத்தம்பி, தென்னரசு, டி,கே,சீனிவாசன், தில்லை வில்லாளன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் உள்ளடக்கம், உத்தி, நடை ஆகியவற்றை முழுமையாகக் கையாண்டு கதை படைத்தவர்களுள் அண்ணா முதன்மையானவர். சாதி சமய மறுப்பு, வறுமை, கலப்பு மணம், பலதார மணம், விதவை மணம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டன இவருடைய கதைகள். **செவ்வாழை** இவருடைய மிகச் சிறந்த கதையாகும். ஏழ்மையின் கொடுமையை இக்கதையில் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். வடிவ உத்தியுடன் பகுத்தறிவுப் பாதையில் கதை எழுதியவர் மு.கருணாநிதி. **குப்பைத்தொட்டி, கண்டதும் காதல் ஒழிக, நளாயினி, பிரேத விசாரணை, தொத்துக் கிளி, வாழ முடியாதவர்கள்** போன்ற இவருடைய சிறுதைகள் குறிப்பிடத்தக்கன. இக்காலக் கட்டத்தில் எழுதிய ஜெயகாந்தன் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

எழுபதுகளில் **சா.கந்தசாமி, இந்திரா பார்த்தசாரதி, ந.முத்துசாமி, அசோகமித்திரன், நீல பத்மநாபன், வண்ணநிலவன், வண்ணதாசன், சுஜாதா, நவபாரதி, சுப்பிரமணிய ராஜு, பாலகுமாரன்** போன்றவர்களும் **பா.செயப்பிரகாசம், பிரபஞ்சன், கிருஷ்ணன் நம்பி, ஜெயமோகன், ஜி.நாகராஜன்** போன்றவர்களும் சிறுகதைப் படைப்புகளில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாகத் தடம் பதித்துள்ளனர்.

இருபத்தோராம் நூற்றாண்டு தொடர்பு யுகம், கணினி யுகம் என்றெல்லாம் சுட்டப்படுகிறது. இந்நூற்றாண்டில், இணைய இதழ்கள் என்ற புதுவகை இதழ்கள் தோற்றம் பெற்றன. அவற்றில் உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் ஒருங்கே இடம் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்த **காஞ்சனா தாமோதரன், கீதா பென்னட்**, இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த **இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன்** போன்றவர்கள் தொடர்ந்து இவ்விதழ்களில் எழுதி வருகின்றனர். இவர்களைத் தொடர்ந்து உலகத் தமிழ் எழுத்தாளர்கள் பலர் சங்கமிக்க இணைய இதழ்கள் வழி அமைத்தால் அது தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியை மற்றோர் உயரத்திற்கு உறுதியாக இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

### 5.4.2 இலங்கையில் சிறுகதைகள்

தமிழ்நாட்டில் 'மணிக்கொடி' வாயிலாகச் சிறுகதைகள் வளர்ந்த காலத்தில் இலங்கையில் சிறுகதை வளர்ச்சிக்கு உதவியவர்கள் சிவபாதசுந்தரம், வைத்தியலிங்கம் முதலானவர்கள். நகுலன் எழுதிய சிறுகதைகள்

'கன்னிப்பெண்', 'இப்படி எத்தனை நாள்' என்ற தொகுதிகளாக அமைந்தன. 'கொட்டும் பனி' என்ற சிறுகதைத் தொகுதியை அளித்தவர் கதிர்காமநாதன். 'தண்ணீரும் கண்ணீரும்', 'பாதுகை' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளைத் தந்தவர் டொமினிக் ஜீவா. முற்போக்கான நோக்கங்கள் அவருடைய கதைகளில் பொதிந்து கிடக்கும்.

சிவஞானசுந்தரம் 'இலங்கையர்கோன்' என்ற இலக்கியப் புனைபெயர் கொண்டு பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். 'வெள்ளிப் பாதரசம்' என்ற தொகுதி சிறந்த கதைகள் கொண்டது. சிறுகதை, நாடகம், நாவல் ஆகிய துறைகளில் பலவற்றைப் படைத்துத் தந்தவர் கனக. செந்திநாதன். அவர் திறனாய்வுத் (criticism) துறையிலும் விளக்கங்கள் தந்து வருபவர். அவருடைய 'வெண்சங்கு' என்ற சிறுகதைத் தொகுதி பெயர்பெற்றது. 'நெடுந்தூரம்' என்ற நாவலும் பல சிறுகதைகளும் இயற்றியவர் டானியல்.

எஸ். பொன்னுத்துரை இருநூறு சிறுகதைகளுக்கு எழுதியுள்ளவர்; 'வீ' முதலான சிறுகதைத்தொகுதிகள் வெளியாகியுள்ளன. சில புதிய முறைகளைக் கையாண்டு சிறுகதைகள் எழுதி வெற்றிபெற்றவர் அவர். 'அணி' என்ற சிறுகதை, முன்னே ஒருவனை நிறுத்தி அவனுடன் பேசுவது போலவே முழுவதும் அமைந்துள்ளது. இலங்கையில் வெவ்வேறு வட்டாரங்களில் பேசப்படும் வெவ்வேறு வகையான பேச்சுமொழிகளில் சில கதைகளை எழுதியுள்ளார். 'விலை' முதலான சில கதைகளில் நனவோடைமுறையை (stream of consciousness) கையாண்டுள்ளார். கதைமாந்தரின் பேச்சு, பழக்கம், மனநிலை, நெறி தவறிய பாலுணர்ச்சி முதலியவற்றைச் சிறிதும் மாற்றாமல், ஆசிரியராகிய தாம் சிறிதும் அவற்றில் தலையிடாமல், அவற்றை அவ்வாறே கதைகளில் தரும் ஆர்வம் உடையவர் அவர். இங்கும் அங்கும் சிறு கோடுகளை இழுத்து, அவற்றாலேயே பொருள்பொதிந்த ஓவியங்களைத் தீட்டிக் காட்டவல்லவர் போல், சிறு சிறு வாக்கியங்களாலேயே கதைமாந்தர்களின் பண்புகள் விளங்குமாறு செய்து விடுகின்றார். கவர்ச்சியும் புதுமையும் விறுவிறுப்பும் உள்ள பல சிறுகதைகளை எழுதி அவற்றைப் பல தொகுப்பாக்கித் தந்தவர் செ. கணேசலிங்கம்.

### 5.4.3 சிங்கப்பூர் சிறுகதைகள்

மலேசிய சிறுகதைகள் வெறும் கதைகளாக இல்லாமல், சமுதாயத்தைப் பிரிதிபலிப்பவையாக விளங்கின. எம்.எஸ்.வேலு, ஜி.ஜான்சன், நா.கோவிந்தசாமி, மா.இளங்கண்ணன், பெரி.நீல.பழநிவேலன், எஸ்.முகம்மது ரஃபீக் ஆகியோரும் சிறுகதை படைக்கலாயினர். சிங்கப்பூர் சிறுகதைக்கு முன்னோடியாக

விளங்கியவர்களுள் ந. பழனிவேலும் ஒருவர். சமுதாயச் சிக்கல்களையும் சீர்திருத்தக் கருத்துகளையும் மையமாக வைத்துக் கதை படைத்து வரும் ஆற்றல் மிக்க படைப்பாளர் இவர்.

1924இல் கோலாலம்பூரில் தமிழ் நேசன் என்ற நாளிதழும், 1931இல் சிங்கப்பூரில் தமிழ் முரசு என்ற நாளிதழும் தோற்றம் பெற்றன. இவ்விரு நாளிதழ்களும் மலேசியா, சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு முக்கியக் களங்களாகத் திகழ்கின்றன. இந்நாடுகளில் வெளியாகும் பாரத மித்திரன், திராவிட கேசரி என்ற இதழ்கள் மணிக்கொடி, விகடன், கலைமகள் ஆகிய இதழ்களிலிருந்து நல்ல சிறுகதைகளை எடுத்து வெளியிட்டுள்ளன. சிங்கப்பூர் சிறுகதை வளர்ச்சிக்கு நாளிதழ்கள் பெரும்பங்காற்றிவருகின்றன. அவற்றில் வெளியாகும் சிறுகதைகள் தொகுக்கப்பட்டுப் பல நூல்களாக வெளிவருகின்றன.

### 5.4.4 மலேசியச் சிறுகதைகள்

மலேசிய எழுத்தாளர்களின் பல சிறுகதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. 'நினைவின் நிழல்' என்பது செ. குணசேகரர் படைத்த சிறு கதைகளின் தொகுப்பு ஆகும். மலேசியத் தமிழர் வாழ்வின் சில பகுதிகள் அவற்றில் சொல்லோவியம் ஆக்கப்பட்டுள்ளன. 'அன்பு அன்னை' என்பது மு. துரைசாமியின் சிறுகதைத் தொகுப்பு ஆகும். அதன் நடை சுவையானது.

'அன்பு இதயம்' என்பது மலேசியச் சிறுகதைகளின் நல்ல தொகுப்பு. துரை, குமார், இராமையா, அன்பானந்தன், சாப்பசான், வீரப்பன், நாகுமணாளன், நெடுமாறன், கிருஷ்ணசாமி, வேலுசாமி, கமலநாதன், இளம்வழுதி, வடிவேல், திருவேங்கடம், மகேசுவரி ஆகிய புதிய எழுத்தாளர் பலருடைய சிறுகதைகள் அதில் உள்ளன. அவர்களுள் பெரும்பாலோர் ரப்பர்த் தோட்டங்களை அடுத்துள்ள பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள். மலேசியப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அவர்கள் தங்கள் அனுபவத்தைக் குழைத்துக் கதைகள் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. 'குரங்கு ஆண்டுப் பலன்' என்ற கதையில் சீனர்களின் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் இடம் பெறுகின்றன. மற்றக் கதைகளில் மலாய் மொழித் தொடர்களும் வருகின்றன. 'கழுவாய்' என்ற ஒரு கதையில் ஒருவன் குடும்ப வாழ்க்கையை அன்பாக நடத்தி அமைதி பெற அறியாத காமுகனாக இருக்கிறான்; பல பெண்களை நாடி அலைகிறான்; கடைசியில் ஒரு நாள் தன் பெண்கள் மூவரையே கண்டு அவர்களின் அழகில் மயங்குகிறான்; அவன் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக் கற்சிலை போல் அமர்ந்திருக்கும் நிலை ஏற்படுகிறது. ரப்பர்த் தோட்டத்தில் ஒற்றுமையாய் வாழத்

தெரியாத தமிழர் படும் இடர் ஒரு கதையில் சொல்லோவியம் ஆக்கப்படுகிறது. இவ்வாறு மலேசியாவின் சிறுகதை இலக்கியம் மெல்ல மெல்ல, தெளிவாக, வளரத் தொடங்கி, தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறது.

## 5.5 விருதாளர்களும் சிறந்த படைப்புகளும்

### விருதாளர்களும் சிறந்த படைப்புகளும்

தமிழ் இலக்கியப் படைப்புகளுக்காக வழங்கப்படும் விருதுகளுள் இந்திய அரசால் வழங்கப்படும் விருது சாகித்திய அகாதெமி விருதாகும். இவ்விருது சிறந்த இந்திய இலக்கிய படைப்பாளிகளுக்கு இந்திய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் வழங்கப்படும் மதிப்பிற்குரிய விருதாகும்.

### 5.5.1 சாகித்திய அகாதெமி விருது

இவ்விருது கிடைக்கப்பெற்றவர்களுக்கு 1,00,000 ரூபாயும், ஒரு பட்டயமும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. இந்த விருதானது இருபத்து நான்கு இந்திய மொழிகளில் சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் போன்ற பலவகையான எழுத்தாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

தமிழில் முதன்முதலில் 1955ஆம் ஆண்டு தமிழ் இன்பம் என்னும் கட்டுரைத் தொகுப்புக்காக ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார். அவரைத் தொடர்ந்து பலர் பல படைப்புகளுக்கான இவ்விருதினைப் பெற்றுள்ளனர். இறுதியாக சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை என்னும் சிறுகதைத் தொகுப்பிற்காக எழுத்தாளர் அம்பை 2021ஆம் ஆண்டு இவ்விருதினைப் பெற்றார்.

### 5.5.2 சாகித்திய அகாதெமி வழங்கும் பிற விருதுகள்

**பாஷா சம்மன் விருது** இந்திய அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்படாத கிளை மொழிகளான சிறுபான்மை மொழிகளில் எழுதும் நூல்களுக்கு வழங்கப்படுகிறது.

**சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருது** இந்த விருது 24 அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் இருந்து மொழிபெயர்க்கப்படும் சிறந்த நூலுக்கு வழங்கப்படுகிறது.

**பால புரஷ்கார் விருது** விருது சாகித்திய அகாதெமியால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் முதலில் வெளிவந்த படைப்பின் இந்திய எழுத்தளாருக்கு வழங்கப்படுகிறது.

**யுவ புரஷ்கார் விருது** விருது 35 வயதுக்குட்பட்ட இளம் இந்திய எழுத்தளார்களின் சிறந்த நூலுக்கு வழங்கப்படுகிறது.

2022ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருதுகளுள், 'தனித்திருக்கும் அரளிகளின் மதியம்' என்ற நூலுக்காக எழுத்தாளர் காளிமுத்துவுக்கு யுவ புரஸ்கார் விருதும், 'மல்லிகாவின் வீடு' என்ற நூலுக்காக ஜி. மீனாட்சிக்கு பால புரஸ்கார் விருதும் அறிவிக்கப்பட்டுள்ளன.

### 5.5.3 ஞானபீட விருது

இந்தியாவில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் உயரிய விருதாகும். இந்த விருதை பாரதிய ஞானபீடம் என்ற பண்பாட்டு இலக்கியக் கழகம் வழங்குகிறது. இந்த விருதானது இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட 15 மொழிகளுள் சிறந்த எழுத்தாளருக்கு வழங்கப்படுகிறது. இவ்விருதினைப் பெற்றவர்களுக்கு இந்திய ரூபாய் 5 இலட்சத்திற்கான காசோலை, தங்கமும் செம்பும் கலந்த பட்டயம், பாராட்டுப் பத்திரம், பித்தளையால் ஆன கலைமகள் சிலை ஆகியவை வழங்கப்படுகிறது. தமிழில் முதன்முதலில் 1975இல் சித்திரப்பாவை என்னும் நாவலுக்காக அகிலன் இவ்விருதினைப் பெற்றார்.

### 5.5.4 குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் விருதுகள்

செம்மொழித் தமிழ்த் திட்டத்தின் சார்பில் தகுதியுள்ள அறிஞர்களுக்குக் கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகள் இந்தியக் குடியரசுத்தலைவர் அவர்களால் வழங்கப்படும்.

- **தொல்காப்பியர் விருது**

மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலட்சம் ரூபாய்ப் பரிசுத் தொகை ஆகியவை இவ்விருதினுள் அடங்கும்; ஒவ்வோர் ஆண்டும் ஓர் இந்திய அறிஞருக்கு வழங்கப்படுகிறது. 2005 – 2006ஆம் ஆண்டு முதலில் பேராசிரியர் அடிகளாசிரியருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

- **குறள்பீடம் விருது**

மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலட்சம் ரூபாய்ப் பரிசுத் தொகை ஆகியவை இவ்விருதினுள் அடங்கும்; ஒவ்வோர் ஆண்டும் இரு விருதுகள் வழங்கப்படுகின்றன. அயல்நாட்டவருக்கு ஒன்று, அயல்நாடு வாழ் இந்தியருக்கு ஒன்று.

- **இளம் அறிஞருக்கான விருது**

மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஒரு இலட்சம் ரூபாய்ப் பரிசுத் தொகை ஆகியவை இவ்விருதினுள் அடங்கும்; ஒவ்வோர் ஆண்டும் ஐந்து விருதுகள் முப்பதிலிருந்து நாற்பது வயதிற்குட்பட்ட இந்திய இளம் அறிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 5.5.5 தமிழக அரசின் விருதுகள்

தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் கீழ்க்காணும் விருதுகளை வழங்கிவருகிறது. சிங்காரவேலர் விருது, மகாகவி பாரதியார் விருது, ஐயன் திருவள்ளுவர் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது, கி.ஆ.பெ.விசுவநாதம் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, சொல்லின் செல்வர் விருது, உமறுப் புலவர் விருது, ஜி.யு.போப் விருது, அம்மா இலக்கிய விருது, மொழிபெயர்ப்பாளர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, மறைமலையடிகளார் விருது, தமிழ்ச் செம்மல் விருது, கம்பர் விருது, இளங்கோவடிகள் விருது, இலக்கிய விருது, மொழியியல் விருது ஆகிய விருதுகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு மட்டுமின்றி, அயலகம் வாழ் தமிழ் எழுத்தாளர்களுக்காகவும் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## 5.6 தொகுப்புரை

### தொகுப்புரை

உணர்வுகளின் புலப்பாடே இலக்கியம் ஆனமையால், இந்த உணர்வுகளின் வேறுபாடுகள் இலக்கிய வகைகளையும் வேறுபடுத்தித் தந்துள்ளன. ஒவ்வொரு புலப்பாட்டிற்கும் உரியதொரு தனி வடிவம் இருப்பது போல, இலக்கிய வெளிப்பாட்டிலும் தனித்தனிப் போக்குகள் ஏற்பட்டுள்ளன என்பதனைக் கண்டோம். உலக அரங்கில் தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் தம் முத்திரையைப் பதித்துக்கொண்டு வருகின்றன.

அவ்வகையில் தமிழில் குழந்தைப்பாடல்கள், கவிதை, மரபிலக்கியங்கள், சிறுகதைகள் அச்சு இயந்திர வருகைக்குப் பின் இதழ்களின் வளர்ச்சியால் பெரும் முன்னேற்றம் கண்டன. தமிழ் தான் வாழும் இடங்களில் எல்லாம் தன் ஆட்சியைச் செலுத்திவருகிறது. இதனை இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் உள்ள இலக்கிய வளர்ச்சிகளின்மூலம் காணமுடிகிறது. படைப்பு என்பது மனிதனின் உணர்வு சார்ந்தது. அவ்வுணர்வு தான் வாழும் சமூகத்தின் பிரதிபலிப்பாக மொழியின் மூலமாக பல படைப்புகளாக வெளிவருகின்றன என்பதனைக் கண்டோம்.

ஆனால், ஆக்கக் கருவியான இலக்கியம் ஒரு கலை எனக் கருதப்படினும் அதைப் படைப்பது அரியதொரு கைவினைப் பொருள் செய்தலைப் போன்றதாகும். படைப்பது மட்டுமன்றி, இலக்கியத்தைப் பயில்வதும், பயிற்று விப்பதும் கலை உணர்வோடு, கைவினைத் திறத்தோடு கைக்கொள்ளுதற்கு உரிய களங்கள் ஆகும். ஆசிரியர்கள் இதனை உணர்ந்து மாணவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். படைப்புக்கலை கைவரப்பெற வேண்டுமெனில் மாணவர்கள் சிறந்த படைப்பாளிகளின் படைப்புகளைப் படித்தல் இன்றியமையாததாகும்.

| **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |
|---|
| 1. மரபுக் கவிதை – குறிப்பு வரைக. |
| 2. இலங்கையில் மரபிலக்கியங்கள் குறித்து எழுதுக. |
| 3. தமிழில் சிறுகதைகள் குறித்து எழுதுக. |
| 4. சாகித்திய அகாதெமி விருது – சிறுக் குறிப்பு வரைக. |
| 5. சாகித்திய அகாதெமி வழங்கும் பிற விருதுகளைக் கூறுக. |
| 6. குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் விருதுகள் யாவை? |

## பார்வை நூல்கள்


1. **உறுதியாக நம்புங்கள்** கே.எஸ்.சுப்ரமணி, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை–17.
2. **படைப்பாற்றல் திறனை வளர்ப்பது எப்படி?** பசுமைக் குமார், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. **தமிழ் கற்பித்தல் –** முதலாமாண்டு, ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை. 2008.
4. **தமிழ்மொழி கற்பித்தல் –** இரண்டாமாண்டு, ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை. 2008.
5. **திறன் மேம்பாடும் படைப்பாற்றல் வெளிப்பாடும் –** தமிழ்த்துறை, ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி, உத்தமபாளையம்.
6. **மொழித் திறன்களும் கற்றல் கற்பித்தலில் தொழில் நுட்பமும் –** கு.முனீஸ்வரன்(பதிப்பாசிரியர்), புத்தாக்கத் தமிழ் மொழியியல் கழகம், மலேசியா, 2017 .
7. **படைப்புக்கலை –** மு. சுதந்திரமுத்து, பாரி நிலையம், 184/88, பிராட்வே, சென்னை – 600 108. ஐந்தாம் பதிப்பு : 2016
8. **மொழித் திறன்களும் கற்றல் கற்பித்தலில் தொழில் நுட்பமும் –** கு.முனீஸ்வரன்(பதிப்பாசிரியர்), புத்தாக்கத் தமிழ் மொழியியல் கழகம், மலேசியா, 2017 .
9. **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்** – பேரா.வி.கணபதி, சாந்தா பப்ளிஷர்ஸ்.
10. **சங்க இலக்கியத்தில் கற்பனை –** மாயாண்டி. இரா., எழிலகம் (பதி), சென்னை, முதல் பதிப்பு 1980.
11. **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் வாழ்வும் சிந்தனையும் –** வே. மீனாட்சிசுந்தரம், பாரதி புத்தகாலயம், சென்னை 18, நான்காம் பதிப்பு 2010.
12. **செம்மொழித் தமிழோவியம் –** வே.பிரபாகரன், திருவள்ளுவர் நூலகம் கோட்டூர்புரம், சென்னை –85. முதற்பதிப்பு 2004.
13. **இலக்கியக்கலை –** அ.ச.ஞான சம்பந்தன், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை –18. முதற்பதிப்பு 1999.
14. **தமிழ்மொழி அகராதி –** நா.கதிரை வேற்பிள்ளை, ஏசியன் கல்வியியல் சேவைமையம், புதுடெல்லி. 10ம் பதிப்பு – 1991.
15. **இலக்கிய ஒப்பாய்வு –** அ.அ.மணவாளன், சங்க இலக்கியம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., சென்னை – 98.

16. **இலக்கியத்திறன்** – மு.வரதராசன், பாரிநிலையம் பிராட்வே, சென்னை –108 மறுபதிப்பு – 2001.
17. **அகநானூறு** – கு.வெ.பாலசுப்பிரமணியன் (பதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., சென்னை – 98. 4ம் பதிப்பு 2011.
18. **குறுந்தொகை** – கு.வெ.பாலசுப்பிரமணியன் (பதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., சென்னை – 98. 4ம் பதிப்பு 2011.
19. **இதழியல் கலை** – மா. பா. குருசாமி, தாயன்பகம், திண்டுக்கல்.
20. **சிறுகதை எழுதுவது எப்படி?** – சுஜாதா, 2011, கிழக்குப் பதிப்பகம், சென்னை.
21. **சிறுகதை – 1** – முனைவர் இரா. பிரேமா, தமிழ் இணையக் கல்விக்கழகம்.
22. **கவிதை இலக்கியம்** – திரு. கி. சிவகுமார், தமிழ் இணையக் கல்விக் கழகம்.
23. **நாடகம் – 1** – திருமதி கு.மங்கையர்க்கரசி, தமிழ் இணையக் கல்விக் கழகம்.
24. **கட்டுரை எழுதுதல் எப்படி?** – க.ப.அறவாணன், 1972, தமிழ்க்கோட்டம், சென்னை.
25. **தமிழ் கற்பித்தல்** – இளங்கலை கல்வியியல் (பி.எட்.) முதலாம் ஆண்டு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.
26. **அயலகத் தமிழ் இலக்கியம்** – சா.கந்தசாமி(தொ), 2016(இ.ப.), சாகித்திய அகாதெமி, புது தில்லி 110 001.
27. **அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்ககள் (தொகுதி – 2)** – 2013, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.
28. **ஈழத்தில் தமிழ் இலக்கியம்** – கார்த்திகேசு சிவத்தம்பி, 2010, குமரன் புத்தக இல்லம், கொழும்பு 10.
29. **சிங்கப்பூர்த் தமிழ்க் குழந்தை இலக்கியம் (திறனாய்வு)** – டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், 2006, தமிழ்க் கலை அச்சகம், சிங்கப்பூர் – 208 787.
30. **சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு கண்ணோட்டம்** – டாக்டர் சுப. திண்ணப்பன், டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், 2002, கலைகள் மன்றம், சிங்கப்பூர் – 119 260.
31. **மலேசியத் தமிழ் இலக்கியம்** – என். செல்வராஜா, த. ஜெயபாலன் (தொ), 2003, தேசம், United Kingdom.